நியமிக்கப்பட்டுள்ளார். இத்தொழில் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருட்களை வாங்குவதற்காக, மாநில வீட்டு வசதி வாரியத்துடனும் தென் பகுதி மாநிலங்களிலுள்ள பிற முக்கிய பொதுத்துறை நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: இம்மாதிரி உற்பத்தி செய்யக்கூடிய துப்புரவு? சாதனங்கள் நல்லமுறையில் செய்யப்படுகிறதா? அவைகளை நம் தமிழ்நாட்டிலுள்ள சானிட்டரி சம்பந்தமான நிலையங்கள் வாங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம் விற்பனையை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் வெளிச் சந்தையில் இருக்கக்கூடிய போட்டி காரணமாக இப்போது விற்பனை குறைந்து வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: களிமண்ணால் செய்யக்கூடிய இந்த மட்பாண்டங்களை மாற்றி க்ளே என்ற மண் இருக்கிறது, பீங்கான் செய்யக்கூடிய மண் இருக்கிறது. அதில் இவற்றைச் செய்வதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா? அதற்கு வேண்டிய சாதனங்களை அவர்களுக்கு அளித்து அவற்றை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா? "மாயனுர் குயவன் செய்த மண்பாண்டம் ஓடடா" என்பதில் ஓடடா என்பதை விட்டுவிட்டு நான் மேற்சொன்னபடி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மண்ணில் பல வகை உண்டு. மட்பாண்டத் தொழிலில் எந்தெந்த மண் வகைகளைப் பயன்படுத்தலாமோ அதைப் பயன்படுத்தி வெளிச்சந்தையில் நன்கு விற்பனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

Sub-Magistrate Courts

* 421 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to shift the Sub-Magistrate Court in Tenkasi in Tirunelveli district to the compound of the District Munsif's Court in Tenkasi?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

* 422 வினா.—திரு. பி. ஜயராஜ்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூ மாவட்டம், நன்னிமம் தாலுக்கா தலைநகரில் Sub-Magistrate Court ஒன்று ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. டி. மார்டின்: நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியிலிருந்து இது போன்றதொரு கோரிக்கையும் அதுபோல் திருநெல்வேலியிலிருந்து ஒரு கோரிக்கையும் அந்த பார் அஸோஸியேஷன்கள் ரெஸல்யூஷன் மூலம் இந்த சர்க்காருக்கு தெரிவித்ததுண்டா? ஆமெனில், அந்தவிதமாக பார் அசோசியேஷன் வழக்கறிஞர்கள் கொடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த